# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.1 நாள் 22.01.2026

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 289/2025 | | |
| பெயர் | சரவணகோபால் | த/பெ. | சஞ்சீவி |
| வயது | 64 | தொழில் | Rtd |
| கிராமம் | நன்னிலம் | தாலுக்கா | நன்னிலம் |

<u>(2ம்எதிரி ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை.பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).</u>

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது நன்னிலத்தில் வசித்து வருகிறேன். நான் 31.07.2019 அன்று மயிலாடுதுறை சரக துணைபதிவாளராக இருந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 19.02.2016 முதல் 31.07.2019 வரை மயிலாடுதுறை சரக துணைபதிவாளராக பணிபுரிந்தபோது சீர்காழி ஆசிரியர்கள் சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் 2014 முதல் 2015 ஆம் ஆண்டுக்கான தணிக்கை கடுங்குறைகள் எனக்கு கிடைக்கப்பெற்றது. எனது சரகத்தைச் சேர்ந்த சீர்காழி ஆசிரியர்கள் சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தில் 01.04.2010 முதல் 14.02.2017 வரை உள்ள காலத்தில் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் தவணை தவறிய கடன்களில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்து மேற்படி சீர்காழி ஆசிரியர்கள் சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் இயக்குநர்கள் தரப்பில் புகார் ஒன்று கிடைக்கப்பெற்றது. அந்த புகாரின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த புகார் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.1** ஆகும். மேற்படி 2014 முதல் 2015 ஆம் ஆண்டுக்கான தணிக்கை கடுங்குறைகள் மற்றும் இயக்குநர்களின் புகாரின் அடிப்படையில் நான் மேற்படி கடன் சங்கத்தின் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81ன் கீழான விசாரணைக்கு எனது அலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.554/2017 நாள்.20.03.2017ன் படி உத்தரவிட்டேன். அந்த விசாரணை அதிகாரியாக கொள்ளிடம் களஅலுவலர் மற்றும்

CJM, MAYILADUTHURAI.

சார்பதிவாளர் திரு.கே.ராமலிங்கம் என்பவரை நியமித்தேன். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.2** ஆகும். மேற்படி செயல்முறை ஆணையில் குறிப்பிட்ட காலக்கெடுக்குள் விசாரித்து அறிக்கை சமர்பிக்க வேண்டி உத்தரவிட்டிருந்தேன். அவர் 22.03.2017 அன்று விசாரணை தொடங்கி செய்லமுறை ஆணையில் குறிப்பிட்ட காலத்தில் விசாரணை அதிகாரியால் விசாரணை முடிக்க இயலவில்லை என எனக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81ன் கீழான விசாரணை அதிகாரி விசாரணையை காலநீட்டிப்பு செய்து அலுவலக ஆணை எண்.554/2017 நாள்.31.07.2017 ன் படி 20.06.2017 முதல் 19.09.2017 வரை கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டது. அந்த காலநீட்டிப்பு கோரிய மனு **அ.சா.ஆ.3** ஆகும். கால நீட்டிப்பு செய்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.4** ஆகும். 19.09.2017 அன்று அந்த தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81ன் கீழான விசாரணை அதிகாரி தனது விசாரணையை முடித்து என்னிடம் அறிக்கை சமர்ப்பித்தார். மேற்படி கூட்டுறவு கடன் சங்கத்தில் 01.04.2010 முதல் 14.02.2017 வரையிலான காலத்தில் சுமார் 11 இனங்களில் மொத்தம் 29,25,000 முறைகேடு செய்ததாக என்னிடம் சமர்ப்பித்தார்.

இனம் 1-ல் கடன் எண்.3202 திருமதி.எஸ். மகாராணி என்பவருக்கு 03.12.2005-ல் ரூ.1,00,000/- வழங்கப்பட்டு அக்கடன் 16.02.2017-ல் முடிவு கட்டப்பட்டது, அக்காலத்தில் அசல் தொகை ரூ.70,550/- செலுத்தியுள்ளார். அதன் படி 14.02.2017-ல் அசல் நிலுவை தொகை ரூ.29,450/- இருக்க வேண்டும். அது செலுத்தப்படாத நிலையில் நிலுவையில் இருந்து கடன் மனோகரன் என்பவரால் கட்டப்பட்டுள்ளது. மேலும் இடைக்காலத்தில் தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கும்போது கடன் நிலுவைகள் கூடுதலாக ரூ.1,00,000/- சேர்த்து கடன் நிலுவை காட்டப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

இனம் 2-ல் கடன் எண்.3472 திருமதி.டி. சிவகாமி என்பவருக்கு 10.12.2007-ல் ரூ.1,00,000/- வழங்கப்பட்டு அக்கடன் 06.01.2012-ல் முடிவு கட்டப்பட்டது, அதன் படி 31.03.2015-ல் அசல் நிலுவை தொகை

CJM, MAYILADUTHURAI.

ரூ.24,170/- இருக்க வேண்டும். அது செலுத்தப்படாத நிலையில் கடன் நிலுவை பேரேட்டில் ரூ.1,00,000/- கடன் தொகையை அதிகரித்து ரூ.1,24,170/- என தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கும்போது கடன் நிலுவை காட்டப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 3-ல் கடன் எண்.3594 திருமதி.ஜெ, பத்மாவதி என்பவருக்கு 14.11.2008-ல் ரூ.2,00,000/- வழங்கப்பட்டு அசல் நிலுவை தொகை ரூ.1,50,700/- இருந்த நிலையில் 24.05.2011 தேதியில் புதிய கடன் அனுமதிக்கப்பட்டு முந்தைய கடன் நிலுவை புதிய கடனில் உளவடை செய்யப்பட்டு முடிவு கட்டப்பட்டுள்ளது. புதிய கடன் வழங்கப்படுவதற்கு முன்பு கடன் நிலுவை பேரேட்டில் ரூ.1,00,000/- கடன் தொகையை அதிகரித்து காட்டி தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 4-ல் கடன் எண்.3622 திருமதி.பொற்செல்வி என்பவருக்கு 23.12.2008-ல் ரூ.2,00,000/- வழங்கப்பட்டு அக்கடன் 05.10.2012-ல் முடிவு கட்டப்பட்டது, ஆனால் முடிவு கட்டப்படாததாகவும் அதில் நிலுவை தொகை ரூ.1,45,600/- இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கும்போது கடன் நிலுவை காட்டப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 5-ல் கடன் எண்.3891 திரு. தியாகராஜன் என்பவருக்கு 06.12.2010-ல் ரூ.3,50,000/- வழங்கப்பட்டு அக்கடன் 19.03.2013-ல் முடிவு கட்டப்பட்டது, ஆனால், நிலுவை தொகை ரூ.3000/- இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கும்போது கடன் நிலுவை காட்டப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து

CJM, MAYILADUTHURAI.

வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 6-ல் கடன் எண்.3824 திருமதி. முத்துலெட்சுமி என்பவருக்கு 09.06.2010-ல் ரூ.2,00,000/- வழங்கப்பட்டு அசல் நிலுவை தொகை ரூ.1,44,000/- இருந்த நிலையில் 21.08.2012 தேதியில் புதிய கடன் அனுமதிக்கப்பட்டு முந்தைய கடன் நிலுவை புதிய கடனில் உளவடை செய்யப்பட்டு முடிவு கட்டப்பட்டுள்ளது. ஆனால், அதன் கடன் கணக்கு எண்ணில் அசல் நிலுவை தொகை ரூ.1,44,000/- இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 7-ல் கடன் எண்.3888 திரு. பாலமுருகன் என்பவருக்கு 06.02.2010-ல் ரூ.3,50,000/- வழங்கப்பட்டு அசல் நிலுவை தொகை ரூ.3,11,000/- இருந்த நிலையில் 31.03.2013 தேதியில் உளவடை வழி வசூலாகி முடிவு கட்டப்பட்டுள்ளது. இக்கடன் தொடர்பாக அதன் கடன் கணக்கு எண்ணில் அசல் நிலுவை தொகை ரூ.3,11,000/- இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 8-ல் கடன் எண்.3920 திரு. தீனாதயாளன் என்பவருக்கு 18.03.2011-ல் ரூ.3,50,000/- வழங்கப்பட்டு அசல் நிலுவை தொகை ரூ.2,93,000/- இருந்த நிலையில் அவருக்கு 25.10.2012 தேதியில் புதிய கடன் தொகையில் உளவடை செய்யப்பட்டு முடிவு கட்டப்பட்டுள்ளது. இக்கடன் தொடர்பாக அதன் கடன் கணக்கு எண்ணில் அசல் நிலுவை தொகை ரூ.2,93,000/- இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு

CJM, MAYILADUTHURAI.

தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 9–ல் கடன் எண்.3808 திரு. தனராஜ் என்பவருக்கு 27.03.2013–ல் ரூ.3,50,000/– வழங்கப்பட்டு அவரால் முழுமையாக கடன் தொகை முடிவு கட்டப்பட்டுள்ள நிலையில் 2012 மற்றும் 2013 கடன் நிலுவை பட்டியலில் அசல் நிலுவை தொகை ரூ.1,48,000/– இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 10–ல் நளினி, கஜேந்திரன், செல்வராணி, சாந்தி, ஜெயந்தி, ரவிச்சந்திரன் மற்றும் வளர்மதி ஆகிய 7 நபர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் நிலுவையில் நின்ற கூடுதல் கடன் தொகை ரூ.13,64,950/– அவர்களுக்கு 27.03.2013–ல் அனுமதித்து வழங்கப்பட்ட புதிய கடன் தொகைகள் உளவடை வழி வசூலிக்கப்பட்டு முடிவு கட்டப்பட்டும், 2012 மற்றும் 2013 கடன் நிலுவை பட்டியலில் அத்தொகை நிலுவை இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும் தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

இனம் 11–ல் கடன் எண்.4021 திரு. வெங்கட்ராமன் என்பவருக்கு 21.10.2011–ல் ரூ.2,00,000/– வழங்கப்பட்டு நிலுவை தொகை ரூ.1,44,200/– இருந்த நிலையில் 07.09.2013 தேதியில் அவருக்கு புதியதாக கடன் அனுமதித்து வழங்கப்பட்ட கடன் தொகை உளவடை வழி வசூலிக்கப்பட்டு முடிவு கட்டப்பட்டுள்ள நிலையில் 2013 – 2014–க்கான கடன் நிலுவை பட்டியலில் அசல் நிலுவை தொகை ரூ.1,86,000/– நிலுவை இருப்பதாக தணிக்கை நிமித்தம் கடன் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சமமான தொகை சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலுவை பேரேடு தயாரிப்பு மற்றும்

CJM, MAYILADUTHURAI.

தவறான கணக்கு பதிவிற்கு செயலர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொறுப்பாவர்.

மேற்படி 11 இனங்கள் ஏற்படுத்தப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் பிரிவு 81ன் கீழான விசாரணை அதிகாரி அறிக்கையினை பரிசீலனை செய்து மேற்படி குற்றங்களை உறுதி செய்யும் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆவணங்கள் விசாரணை அலுவலரால் விசாரணையின் போது கைப்பற்றப்பட்டு எனது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. நான் இது தொடர்பாக வணிக குற்றப்புலனாய்வு துறை காவல் துறை கண்காணிப்பாளருக்கு ந.க.எண்.527/2018, நாள்.27.09.2018 அன்று புகார் அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் புகார்தான் அது. அந்த புகார் **அ.சா.ஆ.5** ஆகும். என்னை வணிக குற்றப்புலனாய்வு பிரிவு துறை ஆய்வாளர் விசாரித்தார்.

( எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது)

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

22/1/21

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.